ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2105/15 - 2019 ජනවාරි මස 07 වැනි සඳුදා - 2019.01.07

2105/15 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: KDS/AKU/4/2/1/65.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல.: 4/3/4/2016/LO/327.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், அக்குரனை பிரதேச செயலாளர் பிரிவில், உடகம்பக கோரலே உப பிரிவில் அலவதுகொட கிராமத்தில் அமைந்துள்ள கண்டிப் பிரதேச நில அளவை அதிகாரியினால் 2018.12.06 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. Maha/ 6868 அடிப்படை வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அம்பலம்பிடியவத்த மற்றும் ஹபுகொடதெனிய கும்புர எனும் காணியின் 0.0592 ஹெக்டயார் விஸ்தீரணமான கீழ் விபரிக்கப்பட்ட துண்டு இலக்கம் 01, 02 எனும் காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு.

**1. துண்டு இல. 1; காணியின் பெயர்: அம்பலம் பிடியவத்த மற்றும் ஹபுகொடதெனிய கும்புர; உரிமை கோருபவர்: தெரியவில்லை; விஸ்தீரணம்: 0.0084 ஹெக்டயார்.**

வடக்கு: அ.வ.ஏ.2222 இன் படி துண்டு இல. 05 மற்றும் எம்.ஓ.ஏ.கரீம் மற்றும் ஏனையோர் உரிமை கோரும் அம்பலம்பிடியவத்த மற்றும் ஹபுகொட தெனிய கும்புர; கிழக்கு: துண்டு இல. 02; தெற்கு: துண்டு இல. 02 மற்றும் அ.வ.மஹ 1527 இன் படி துண்டு இல. 01; மேற்கு: அ.வ.மஹ. 1527 இன் படி துண்டு இல. 01 மற்றும் அ.வ..ஏ.2222 இன் படி துண்டு இல. 05.

**2. துண்டு இல. 2; காணியின் பெயர்: அம்பலம் பிடியவத்த மற்றும் ஹபுகொடதெனிய கும்புர; உரிமை கோருபவர்: தெரியவில்லை; விஸ்தீரணம்: 0.0508 ஹெக்டயார்.**

வடக்கு: அ.வ.மஹ.1527 இன் படி துண்டு இல. 01 மற்றும் இவ்வரைபடத்தின் துண்டு இல. 01, எம். ஓ. ஏ. கரீம் மற்றும் ஏனையோர் உரிமைகோரும் அம்பலம் பிடியவத்த மற்றும் ஹபுகொடதெனிய கும்புர; கிழக்கு: பாதை; தெற்கு: ஏ. சீ. எம். பௌசாத் மற்றும் ஏனை யோர் உரிமைகோரும் அம்பலம்பிடியவத்த மற்றும் ஹபுகொடதெனிகும்புர, ஆர். ஆர். எம். புஞ்சிபண்டா உரிமைகோரும் அம்பலம்பிடியவத்த மற்றும் ஹபு கொடதெனிய கும்புர; மேற்கு: ஆர். ஆர். எம். புஞ்சி பண்டா உரிமைகோரும் மற்றும் ஹபுகொடதெனிய கும்புர, அ. வ. மஹ 1527 இன் படி துண்டு இல. 01.



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, அக்குரனை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாதவ வர்னகுலசூரிய,
பிரதேச செயலாளர்,
அக்குறணை,
கண்டி மாவட்டம்.

பிரதேச செயலகம்,
அக்குறணை,
2019, சனவரி 01.

1 - 519